தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 064 /ந/2023
நாள் 02.05.2023

திரு. மு. செல்வம்,
சங்கரன்கோவில்,
தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், காமராஜ் நகர் 2வது தெரு, கதவு எண். 19 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. செல்வம் என்பவரின் 14.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.03.2023 அன்று பெறப்பட்டு 064/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், காமராஜ் நகர் 2வது தெரு, கதவு எண். 19 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. செல்வம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"எனது தந்தையார் (லேட்) செ. முருகன் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சியில் 4வது பிரிவில் துப்புரவு பணியாளராக 29 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி வந்தார். கடந்த 26.08.2020 அன்று எனது தந்தை கொரோனாவால் பாதிக்கப்பட்டு பணியின் போது காலமானார். எனது தாயார் திருமதி. மு. வள்ளி என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்கான கருத்துருவை அனுப்ப ரூ.10,000/– ஐ நகராட்சி முதுநிலை உதவியாளர் திரு.முருகன் என்பவர் பெற்றுக்கொண்டு 9 மாதங்களுக்கு பின்பு குடும்ப ஓய்வூதிய பிரேரணை கடிதம் மற்றும் பணிப்பதிவேடுடன் 12.05.2021 அன்று உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. துப்புரவு பணியாளரின் பணிப் பதிவேடு நகலை, நகராட்சி நிர்வாக ஆணையாளரின் ஒப்புதலுடன் மீண்டும் இணைத்து அனுப்பப்படும் பட்சத்தில் அவற்றை உண்மை நகலாக ஏற்று கொள்ளப்படும் என உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்திலிருந்து

கடிதம் (மூ.மு.எண்.10698/ந ஒ ச (3) /2021 நாள் 29.10.2021) சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின்பு குடும்ப ஓய்வூதிய கருத்துருவை அனுப்பி வைக்குமாறு பலமுறை நகராட்சி அலுவலகத்தை நாடினோம். அவர்கள் நாளை கையெழுத்து பெற்று அனுப்புவோம். அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும் என காலம் தாழ்த்தி வந்தனர். எனது தந்தையாரின் பணிப்பதிவேடு காணவில்லை என நகராட்சி நிர்வாகம் கூறும் போது எனது தந்தை, முந்தைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு அளித்தார். பின்பு சங்கரன்கோவில் நகராட்சியில் இருந்து புதிதாக ஒரு பணிப்பதிவேடு எழுதப்பட்டு விட்டது. இனி பிற்காலத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் இதை பெரிது படுத்த வேண்டாம் எனக் கூறி புதிய பணிப்பதிவேடுவில் கையெழுத்து இடச் சொன்னார்கள், தந்தையும் குடும்பத்தார்களும் நிம்மதி அடைந்தனர். தற்போது எனது தந்தையார் கொரோனாவில் இறந்த பின்பு குடும்ப ஓய்வூதியம் பெற விண்ணப்பித்த போதுதான் பணிப்பதிவேடு குளறுபடி உள்ளது என தெரிய வந்தது. எனது தந்தையின் பணிப்பதிவேடு தொலைந்தது என 2008–ல் தெரியும் போது இளநிலை உதவியாளரான திருமதி. மாரியம்மாள் என்பவரின் பாதுகாப்பில் தான் இருந்தது. அவருக்கு உதவியாளராக திரு.முருகன் என்பவரும் பணியாற்றினார். திருமதி. மாரியம்மாள் அவர்கள்தான் எனது தந்தையின் புதிய பணி பதிவேடு எழுதினார்கள். தற்போது அவர்கள் பதவி உயர்வு பெற்று, சங்கரன்கோவில் நகராட்சியில் மேலாளர் பொறுப்பில் திருமதி.மாரியம்மாள் அவர்களும், உதவியாளராக இருந்த திரு.முருகன், முதுநிலை உதவியாளராக தற்பொழுது பணியாற்றுகின்றார். அவர்களிடம் பலமுறை முறையிட்டும் சரியான தகவல்களை கூறுவது இல்லை முன்னுக்கு பின் முரணாக தகவல்களை கூறுகின்றனர். பலமுறை மனு அளித்தும் அதன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. நேரில் சென்று அணுகும் போது குடும்ப ஓய்வூதியம் அனுப்பப்பட்டுவிட்டது என்கிறார்கள். ஆனால் எங்களுக்கு கிடைக்கவில்லை, அதற்குரிய நகலும் தரவில்லை.

மதிப்பிற்குரிய உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அய்யா அவர்கள் எங்கள் இன்னல்களை நீக்கி எனது தந்தையின் பணிப்பதிவேடு நகல் ஒப்புதல் பெற்று குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பலன்களை கிடைக்க வழிவகை செய்து ஆவனச் செய்ய தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் தனது 10.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக 01.05.1991 முதல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வந்த திரு.செ.முருகன் த/பெ.செல்லையா என்பவர் 26.08.2020 அன்று கொரோனா தொற்று ஏற்பட்டு காலமானார். அன்னாரின் மனைவி திருமதி.மு.வள்ளி என்பவரும் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசு கடிதம் (Ms) No.15238/DMI (1) /2020–1 வருவாய் நிர்வாகம் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம் சென்னை –5 நாள் 10.08.2020 கடிதத்தின்படி கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு காலமானதால் தமிழ்நாடு அரசு வழங்கும் நிவாரணத்தொகை ரூ 25.00 இலட்சம் வழங்கிடக்கோரி மருத்துவ ஆவண சான்றுகளுடன் 16.06.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் மேற்படி நிவாரணத்தொகை அனுமதிப்பதற்காக காலஞ்சென்ற தூய்மைப் பணியாளர் திரு.செ.முருகன் என்பவரின் பணிப்பதிவேடு அனுப்பி வைக்க 06.07.2021 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி செய்தியின் மூலம் பெறப்பட்டது.

மேற்படி காலஞ்சென்ற முருகன் என்பவரின் மனைவி திருமதி.மு.வள்ளி என்பவர் தனது கணவர் காலமானதால் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கவேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்ததன்படி உரிய ஆவணங்களுடன் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கக்கோரி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு 12.05.2021–ல் குடும்ப ஓய்வூதிய முன்மொழிவுடன் பணிப்பதிவேடும் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளதாக சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் ந.க.எண்.1111/2021/சி1/ நாள் 06.07.2021–ல் தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11219/J2/2021–4 நாள் 15.07.2021 கடிதத்தின்படி சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு காலமான திரு.செ.முருகன் என்பவருக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் நிவாரணத்தொகை ரூ 25.00 இலட்சம் அனுமதிக்கப்படுவதற்கு மேலும் கூடுதல் விபரங்கள் அனுப்ப தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் 17.09.2021–ந் தேதிய சங்கரன்கோவில் நகராட்சி அலுவலக கடிதம் மூலம் கூடுதல் விபரங்கள் நகராாடசி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஆணை (ப) எண்.37 நாள் 02.02.2022–ன்படி கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு காலமான திரு.செ.முருகன் என்பவரின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ 25.00 இலட்சம் வழங்க ஆணை வழங்கப்பட்டு அதனடிப்படையில் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11219/2021/எச்1 நாள் 23.02.2022–ன்படி நிவாரணத்தொகை ரூ 25.00 இலட்சம் விடுவிக்கப்பட்டு திரு.செ.முருகன் என்பவரின் குடும்பத்திற்கு வாரிசுதாரரான மனைவி திருமதி.மு.வள்ளி என்பவருக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காலஞ்சென்ற திரு. முருகன் என்பவரின் புதல்வர் திரு.மு.செல்வம் என்பவர் தனது தந்தை காலமானதால் கருணை அடிப்படையில் பணியிடம் வழங்கிடக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கும், நகராட்சிக்கும் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேற்படி மனுதாரர் திரு.மு.செல்வம் என்பவரின் தாயார் திருமதி.மு.வள்ளி என்பவர் சங்கரன்கோவில் நகராட்சியில் நிரந்தர தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வருவதால் அரசாணை மற்றும் கருணை அடிப்படையில் பணியிடம் வழங்குவதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி கருணை அடிப்படையில் பணியிடம் வழங்க வழிவகை இல்லை என விரிவாக குறிப்பிட்டு கடிதம் மூலம் மனுதாரருக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருமதி.மு.வள்ளி க/பெ.முருகன் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்ககோரி அனுப்பப்பட்ட முன்மொழிவுகளின்படி கீழ்க்கண்ட குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்ககம், அவர்களின் கடிதம் மூ.மு.எண்.10698/நஒச(3)/2021 நாள் 29.10.2021 கடிதத்தின்மூலம் முன்மொழிவுகள் மற்றும் பணிப்பதிவேடு திரும்ப பெறப்பட்டுள்ளது.

"தனியரின் பணிப்பதிவேடு பக்கம் 22/ தொகுதி I இல் சிறப்பு நிலை வழங்கப்பட்டு ஆணையாளரால் சான்றொப்பமிடாமல் உள்ளது. இதனை அரசாணை / விதிகளின்படி நிர்வாக ரீதியில் மீள ஆய்விட்டு அன்னாருக்கு சிறப்பு நிலை வழங்கி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டதை உறுதி செய்யப்படவேண்டும் காலஞ்சென்ற பணியாளரின் பணிவரன்முறை விபரம் பணிப்பதிவேட்டில் பதிந்து ஆணையரின் சான்றொப்பமிடவேண்டும். காலஞ்சென்ற பணியாளருக்கு நகல் பணிப்பதிவேடு தயார் செய்யப்பட்டுள்ளது. நகல் பணிப்பதிவேடு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று தயார் செய்யப்பட வேண்டும். எனவே இவ்வினத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆணையின் நகல் இணைத்தனுப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. காலஞ்சென்ற பணியாளரது அசல் வாரிசு சான்று, வாரிசுகளின் படிவம் 12 மற்றும் ஓய்வூதிய கணக்கீட்டுத்தாள் ஆகியவை முன்மொழிவுடன் இணைத்தனுப்படவேண்டும் என்று தெரிவித்து முன்மொழிவுகளுடன் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

மேற்படி காலஞ்சென்ற திரு.செ.முருகன் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியமர்த்தப்பட்டு 01.05.1991–ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார். தூய்மைப் பணியாளர் பணியிடத்திற்கு நியமன அதிகாரி ஆணையாளர் என்பதாலும் தூய்மை பணியாளர் திரு.செ.முருகன் என்பவரின் பணிப்பதிவேடு காணாமல் போனதால் தனியர் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 01.05.1991 முதல் பணிக்காலத்திற்கான பதிவுகள் அப்போதைய ஆணையாளரால் உறுதி செய்யப்பட்டு 10.12.2008–ல் ஆணையாளரால் ஒப்பம் செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தனியர் சங்கரன்கோவில் நகராட்சியில் தொடர்ந்து பணிபுரிந்துள்ள காலத்தினையும், பணியாளர் காலமான 26.08.2020 வரை தொடர்ந்து விடுதல் ஏதுமின்றி பணிப்பதிவேடு பராமரிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்படி பணிப்பதிவேடு ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினரால் பணிப்பதிவேடு தணிக்கை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி காலஞ்சென்ற தூய்மைப் பணியாளர் திரு.செ.முருகன் என்பவரின் மனைவி திருமதி.வள்ளி என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கும் பொருட்டு தூய்மை பணியாளர் திரு.செ.முருகன் என்பவரின் நகல் பணிப்பதிவேடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் பின்னேற்பு அனுமதி ஆணை வழங்கிட வேண்டி கருத்துரு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையரும் 11.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. என்.பரமேஸ்வரன், 11.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்.

"எனது தந்தை முருகன் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணியாற்றி, கடந்த 26.8.2020ல் கொரோனா தொற்று காரணமாக காலமானார். எனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் எங்களுக்கு சேர வேண்டிய எனது தந்தையின் ஓய்வூதியப் பலன்கள் சுமார் 2 1/2 வருடங்கள் ஆகியும் சங்கரன் கோவில் நகராட்சியால் எங்களுக்கு வழங்கப்படவில்லை. நகராட்சியில் சென்று கேட்டபோது எனது தந்தையின்

ஓய்வூதியப் பலன்கள் குறித்த கருத்துருவை நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பும்போது காணாமற்போன எனது தந்தையின் பணிப் பதிவேட்டிற்கு பதிலாக அதன் நகலை அனுப்பியதாகவும், அதில் சில குறைபாடுகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியுள்ளதாகவும், அதனை நிவர்த்தி செய்து மீண்டும் மேற்கண்ட கருத்துரு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்து காலங்கடத்தி வருகின்றனர்.

எனவே, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளை விரைவில் நகராட்சி நிவர்த்தி செய்து எங்களுக்கு சேர வேண்டிய ஓய்வூதியப் பலன்களை மேலும் காலம் தாழ்த்தாமல் விரைவில் அளித்திட ஆவனசெய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.கி.ஹரிஹரன் மற்றும் சங்கரன்கோவில் நகராட்சியில் மேலாளராக பணிபுரியும் திருமதி. ப. மாரியம்மாள் ஆகியோரும் 11.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.செ.முருகன் என்பவர் 26.8.2020ல் காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கக்கோரி நிதித் தணிக்கை இயக்ககத்திற்கு முன்மொழிவுகள் 12.5.2021 அன்று அனுப்பப்பட்டது. மேற்கண்ட பணியாளரின் பணிப் பதிவேடு (Service Register) நகராட்சியில் இல்லாத காரணத்தால் பணிப் பதிவேட்டின் நகலுடன் மேற்கண்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. பணிப் பதிவேட்டின் நகலைக் கொண்டு மறைந்த பணியாளருக்கு அவரது பணிக் காலத்தில் வழங்கப்பட்ட சிறப்பு நிலை ஊதியம் தொடர்பாகவும், நகல் பணிப் பதிவேட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என சில குறைபாடுகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டி, சங்கரன் கோவில் நகராட்சியின் முன்மொழிவுகளை 29.10.2021 அன்று திருப்பி அனுப்பியுள்ளது. மேற்கண்ட குறைகளை களைந்து மீளவும் முன்மொழிவுகள் இன்னும் ஓரிரு நாளில் நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்படும் எனவும் மேலும் மறைந்த பணியாளருக்கான ஓய்வூதியப்பலன்களை நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று காலஞ்சென்ற பணியாளரின் ஓய்வுதியப் பலன்களை அவரது குடும்பத்தினருக்கு 2023 மே மாதம் இறுதிக்குள் சங்கரன்கோவில் நகராட்சி/ உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறைமன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்படும் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரின் (பொறுப்பு) 10.4.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் சங்கரன்கோவில் நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலைச் சேர்ந்த மனுதாரர் திரு.மு.செல்வம் என்பவர் தனது 14.03.2023 நாளிட்ட மனுவில் தனது தந்தை திரு.செ.முருகன் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக 01.05.1991 அன்று பணியில் சேர்ந்துள்ளார் என்றும் அவர் 39 வருடங்கள் பணியாற்றி வந்த நிலையில் பணியிடையில் 26.08.2020 அன்று கொரோனாவால் காலமானதை தொடர்ந்து, 2008 ஆம் ஆண்டில் சங்கரன்கோவில் நகராட்சியில் அவரது பணிப்பதிவேடு தொலைந்து போனதன் காரணமாக தனது தாயாருக்கு சேர வேண்டிய குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்கப்படாமல் இந்நாள்வரையில் நிலுவையில் உள்ளதாக புகாராக தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில் திரு.செ.முருகன் என்பவர் 01.05.1991 முதல் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்துள்ளார். இதற்கிடையில் 2008 ஆம் ஆண்டில் இவரது பணிப்பதிவேடு சங்கரன்கோவில் நகராட்சியில் காணாமல் போனதைத் தொடர்ந்து, உரிய ஆவணங்களின் மூலம் திரு.செ.முருகன் என்பவரின் பணிப்பதிவேடு இரண்டாம்படி (Duplicate Service Register) 10.12.2018 அன்று நகராட்சியால் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினரால் பணிப்பதிவேடு தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரின் தந்தை திரு.செ.முருகன் என்பவர் கொரோனா தொற்று நோய் காரணமாக பணியிடையில் 26.08.2020 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவிக்கு சேர வேண்டிய குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்கிடக் கோரி காலஞ்சென்ற திரு.செ.முருகன் என்பவரின் மனைவியான சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.மு.வள்ளி என்பவர் 05.05.2021 நாளிட்ட விண்ணப்பத்தினை நகராட்சியில் சமர்ப்பித்துள்ளார்.

குடும்ப ஓய்வூதியம் வழங்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்ட ஒரு வார காலத்திற்குள் அதாவது 12.05.2021 அன்று உரிய முன்மொழிவுகள் பணிப்பதிவேட்டினையும் சேர்த்து குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கக் கோரி நகராட்சியால் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டது. நகராட்சியால் அனுப்பப்பட்ட முன்மொழிவுகளில் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டியும் மற்றும் மறைந்த பணியாளரின் இரண்டாம்படி பணிப்பதிவேட்டினை (Duplicate Service Register) நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி ஆணையுடனும் அனுப்புமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் 29.10.2021 அன்று சங்கரன்கோவில் நகராட்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சுட்டிக் காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமல் 29.10.2021 முதல் மனுதாரரின் புகாரினை இம்முறைமன்ற நடுவத்தால் விசாரிக்கும் வரை அதாவது 11.04.2023 வரை சுமார் 1 ½

வருடங்களாக குடும்ப ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பணப்பயன்களை வழங்கும் வகையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் முன்மொழிவுகள் நகராட்சி அலுவலகத்திலேயே நிலுவையாக வைத்துள்ளதன் மூலம் நகராட்சி அலுவலர்கள் பொறுப்பற்ற முறையில் மெத்தனத்துடனும், மனிதாபிமானமின்றியும் செயல்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைகளில் புகார்கள் மற்றும் காலதாமதங்களுக்கு இடமளிக்காத வகையில் உடனடியாக சேவைகளை அளித்திடுவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். இவ்வாறிருக்க, இப்புகாரில் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலர்களின் அலட்சியப் போக்கு, பொறுப்பற்ற முறையில் செயல்படும் நடவடிக்கையினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் கண்டிக்கிறது. இதுபோன்ற நீண்ட கால தாமதத்தை ஏற்படுத்துவதற்கான துணிச்சலும் அவர்களுக்கு உள்ளதை தெளிவாகக் காட்டுகிறது. இதன் விளைவாகவே மனுதாரர் இந்த முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார். இதன் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளையும் மீறி நடந்து கொண்ட நகராட்சி அலுவலர்களின் நடவடிக்கையினை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்நிலையில் சங்கரன்கோவில் நகராட்சியில் மறைந்த தூய்மைப் பணியாளர் திரு.செ.முருகன் என்பவரின் ஓய்வூதிய பணப்பயன்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதில் நீண்ட காலதாமதம் செய்துள்ள சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர்கள் மேலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், குடும்ப ஓய்வூதிய பணப்பயன்கள் காலதாமதமாக வழங்கப்படுவதற்கான வட்டி தொகை முழுவதையும் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்துகிறது.

மேலும் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, குடும்ப ஓய்வூதியம் மற்றும் அனைத்து ஓய்வூதிய பணப்பயன்களையும் 2023 ஆம் ஆண்டு மே மாத இறுதிக்குள் வழங்கி அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

நகராட்சி நிர்வாக ஆணையர் இதனைக் கண்காணித்து ஆணையத்தின் ஆணைகளை சங்கரன்கோவில் நகராட்சி நிறைவேற்றுவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்.

This is an instance where a deceased Municipality employee's terminal benefits have not ben disbursed for nearly 3 years due to the official lapses, omission and negligence of the Municipality. The RDMA institution of the Region also has failed in reviewing such pendency in the Municipality and guiding the officials for early settlement.

The DMA is advised to list out this responsibility as one of the duties of the RDMA if it is not already a part of their regimen as the Commissioners and officers are found wanting is sensitive response in such cases. Similar pending cases in the state should be also settled as early as possible by a special drive.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.மு. செல்வம்,
19, காமராஜ் நகர் 2வது தெரு,
சங்கரன்கோவில் – 627 756, தென்காசி மாவட்டம்.

2) ஆணையாளர், சங்கரன்கோவில் நகராட்சி,
சங்கரன்கோவில் – 627 756, தென்காசி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்